# நிதி ஆணைக்குழு

## இலங்கை அரசியல் அமைப்பின் அதி மேதகு ஜனாதிபதிக்கான பரிந்துரைகள் - (2018)

(இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 154 ஆர் (4) பிரகாரம்)

**ஆகஸ்து** 2017

සභාපති
தலைவர்
Chairman
(+94) 011 2556840

ලේකම්
செயலாளர்
Secretary
(+94) 011 2556831

කාර්යාලය
காரியாலயம்
Office
(+94) 0112556834
0113071324

ෆැක්ස්
தொ.நகல்
Fax
(+94) 011 2556836
011 2556837

විද්‍යුත් තැපෑල
மின்னஞ்சல்:
e-mail
fincom@sltnet.lk

මුදල් කොමිෂන් සභාව
( ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154'ඡ' ව්‍යවස්ථාව යටතේ පිහිටුවන ලදී.)

**நிதி ஆணைக்குழு**
(அரசியலமைப்பின் 154`ண ஆம் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்டது)

FINANCE COMMISSION
(Established under Article 154 R of the Constitution)

48, වජිර පාර,
කොළඹ 04. ශ්‍රී ලංකා

48, வஜிரா வீதி,
கொழும்பு-04, இலங்கை.

48, Vajira Road,
Colombo 04, Sri Lanka.

මගේ අංකය
எனது இல
My No
**FC/3/1/2017**

ඔබේ අංකය
உமது இல
Your No

දිනය
திகதி
Date
**21.08.2017**

அதிமேதகு மைத்திரிபால சிரிசேன

இலங்கைச் சனநாயகசோசலிசக் குடியரசுச் சனாதிபதி

சனாதிபதிசெயலகம்

கொழும்பு-01

மேதகுஉத்தமனாரே!

இலங்கைச் சனநாயகசோசலிசக் குடியரசுஅரசியலமைப்பின் 13வது திருத்த 154 (ஆர்) ஆம் உறுப்புரையின் கீழ் கேட்டுக் கொண்டவண்ணம்,நாட்டில் சமச்சீர் பிரதேச அபிவிருத்தியை அடைவதற்காகவும்,மாகாணங்களின் பயன்படுத்தல்களுக்காகவும் அரசாங்கத்தினால் 2018 ஆம் ஆண்டு வருடாந்த வரவு செலவுத்திட்டத்திலிருந்து, உத்தேச உபாயங்கள் உள்ளடங்கலாக பல்வேறு மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்க வேண்டிய தொகைகளைப் பரிந்துரை செய்கின்றேன்.

அரசியலமைப்பின் உறுப்புரை 154 ஆர் (7) ன் பிரகாரம் பரிந்துரைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றேன்.

தங்கள் உண்மையுள்ள

(கையொப்பம்) யு.எச்.பலிஹகார

தலைவர்

நிதி ஆணைக்குழு

# உள்ளடக்கம்


**1.** அறிமுகம் ........................................................................................................ 1

**2.** நிதி ஆணைக்குழுவின் பிரதான பொறுப்புக்களும் வகிபாகமும் ................................................ 1

**3.** மாகாணங்களுக்கான அரசின் கொடை ........................................................................ 3

**4.** மாகாணத் தேவைப்பாட்டினை மதிப்பிடுதல் ................................................................ 4

**4.1** மூலதனத் தேவை மதிப்பீடு .................................................................................... 4

**4.2** நடைமுறைத் தேவை மதிப்பீடு ................................................................................ 5

**4.3** 2018 ஆம் ஆண்டுக்காக மாகாணங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளுக்கான கோரிக்கைகள் ........................................................................ 5

**4.4** மாகாணங்களுக்கு மூலதன நிதியினைப் பகிர்ந்தளித்தல். ................................................ 6

**4.5** மாகாணங்களுக்கு மீண்டெழும் நிதியினைப் பகிர்ந்தளித்தல். ............................................ 8

**5.** மாகாண வருமானம் .............................................................................................. 9

**5.1** அரசாங்க வருமானத்தின் மூலமான மாற்றல்கள் ........................................................... 9

**5.2** அதிகாரம் பகிர்வளிக்கப்பட்ட வழிகள் மூலம் சேகரிக்கப்படும் வருமானம் .......................... 11

**5.3** 2018 ஆம் ஆண்டிற்கான வருமாண எதிர்வுகூறல் ......................................................... 11

**5.3.1** அரசாங்க வருமானங்களில் இருந்தான மாற்றல்கள் ...................................................... 12

5.3.2 அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான மூலங்களில் இருந்தான வருமான இலக்குகள் .......... 12

**6.** கொள்கைப் பரிந்துரைகள் ......................................................................................... 14

# அட்டவணை

அட்டவணை 1: வருடாந்த தேசிய வரவு செலவுத்திட்டத்தில் இருந்து வருடாந்தம் மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளின் சதவீதம்........2
அட்டவணை 2: மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளுக்கான மாகாண சபைகளின் கோரிக்கைகள் - 2018........5
அட்டவணை 3: மாகாணங்களுக்கிடையில் மூலதன நிதி (மா.கு.அ.கொ மற்றும் பி.அ.கொ) பகிர்ந்தளிக்கப்பட்ட சதவீதம் - 2018........7
அட்டவணை 4: மதிப்பிடப்பட்ட மாகாண மூலதன தேவைகள் - 2018........7
அட்டவணை 5: மாகாணங்களுக்கான மதிப்பிடப்பட்ட மொத்தக் கொடை 2018........8
அட்டவணை 6: மதிப்பிடப்பட்ட உள்ளூராச்சி அரச மாற்றல்கள் - 2018........9
அட்டவணை 7: தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் முத்திரைத் தீர்வையானது மாகாண சபைகளுக்கிடையில் பகிரப்படும் வீதம........10
அட்டவணை 8: அரசாங்க வருமான மாற்றல்கள்........10
அட்டவணை 9: அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் - 2017 (மே வரை)........11
அட்டவணை 10: மாகாணங்களுக்கான மதிப்பிடப்பட்டுள்ள அரசாங்க வருமானத்தில் இருந்தான மாற்றல்கள் - 2018........12
அட்டவணை 11: அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான மூலங்களில் இருந்தான எதிர்வு கூறப்பட்ட வருமானம் - 2018........13
அட்டவணை 12: உள்ளூராட்சி மன்றங்களால் மாற்றப்படவுள்ள முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் -2018........14

# இணைப்பு

இணைப்பு 1: ஒதுக்கிடப்பட்டதும் விடுவிக்கப்பட்டதுமான மொத்தக் கொடை 2013 -2017........i
இணைப்பு 2: ஒதுக்கிடப்பட்டதும் விடுவிக்கப்பட்டதுமான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை 2013 -2017........i
இணைப்பு 3: ஒதுக்கிடப்பட்டதும் விடுவிக்கப்பட்டதுமான பிரமாண அடிப்படையிலான கொடை 2013 -2017........ii
,ணைப்பு 4: நிதி ஒதுக்கீட்டுக்காகத் தெரிவு செய்யப்பட்ட மாறிகள் 2013 -2017........ii
,ணைப்பு 5: மாகாண வருவாய் சேகரிப்பு மூலங்களிலிருந்து 2013 -2017........iii

## 1. அறிமுகம்

அரசியல் அமைப்பின் 1987ஆம் ஆண்டின் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தின் 154ஆர்(4) உறுப்புரையின் கீழ் நிதி ஆணைக்குழு உருவாக்கப்பட்டது 2018 ஆம் ஆண்டிற்காக அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை உரிய பிரமாணங்களின் அடிப்படையில் மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிப்பதற்கான பரிந்துரையை அதி மேதகு ஜனாதிபதிக்கு வழங்குகிறது.

இப்பரிந்துரைகளைத்தயாரிக்கும் போது, மாகாணசபைகளினால் கோரப்பட்ட நிதித் தேவைகள் மாகாணங்களின் பங்குபற்றலுடன் மீளாய்வு செய்யப்பபட்டு நிதி ஆணைக்குழுவிற்கு அரசியல் யாப்பினால்அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு உட்பட்ட வகையில் நியாயமான முறையில் நிதியானது பகிர்ந்தளிக்கப்படும்.

நிதி ஆணைக்குழுவானது தனது கடந்த 30 வருட சேவையினூடாக அடைந்து கொண்டுள்ள தேர்ச்சி மற்றும் ஏனைய கொள்கை சிபார்சுகளையும் நாட்டில் சீரான பிராந்திய அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும் வகையில் அவசியமான சிபார்சுகளை சமர்ப்பிக்கின்றது.

மாகாணங்களின் தேவைகளைப்பூர்த்தி செய்வதற்குப் போதுமான நிதியை அரசாங்கம் வழங்கும் என நிதி ஆணைக்குழு எதிர்பார்க்கிறது. நாட்டில் குறைந்த பட்ச பிராந்திய வேறுபாட்டுடன் கூடிய உயர்தர சமூக பொருளாதார வாழ்க்கைத்தரத்தை அடைந்து கொள்வதற்கு இவ் அறிக்கையினூடாக முன் வைக்கப்படும் கொள்கை பரிந்துரைகள் மீது அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## 2. நிதி ஆணைக்குழுவின் பிரதான பொறுப்புக்களும் வகிபாகமும்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தமானது நிதி ஆணைக்குழு ஸ்தாபிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்தது. ஆணைக்குழுவின் பிரதான பொறுப்புகள் அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடையும நோக்கம் கொண்ட ஒன்பது மாகாணங்களுக்கிடையில் நிதி ஒதுக்கீடு குறித்த கொள்கைகள் மற்றும் கொள்கை வழிகாட்டல்களை உருவாக்குதல் ஆகும். அரசியலமைப்பின் 154 சு (3)இ (4) மற்றும் (5) பிரிவுகளில் குறிப்பிட்டுள்ளபடி நிதி ஆணைக்குழுவின் ஆணைகள் வருமாறு.

அரசியல் அமைப்பின் பதின்மூன்றாவது திருத்த சட்டமூலத்தின் உறுப்புரை 154ஆர்(3), (4) மற்றும் (5) பின்வருமாறு கூறுகின்றது.

i. அரசாங்கமானது நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஆலோசனையோடு வருடாந்த பாதீட்டிலிருந்து மாகாணங்களின் தேவைகளை ஈடு செய்வதற்கு போதுமான நிதிகளை ஒதுகீடு செய்யும்.

ii. ஆணைக்குழுவினால் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அ) அரசாங்கத்தினால் மாகாண சபைகளின் தேவைகளுக்காக ஆண்டுதோறும் எந்தக் கொள்கையின் அடிப்படையில் மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் எனவும் மற்றும்,

ஆ) ஜனாதிபதியினால் மாகாண நிதி தொடர்பில் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏனைய விடயங்கள்

iii. நாட்டில் சமமான பிராந்திய அபிவிருத்தியை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு அவசியமான கொள்கைகளை ஆணைக்குழுவானது பின்வரும் விடயங்களையும் கருத்திற் கொண்டு அதாவது

i. ஒவ்வொரு மாகாணத்தினதும் சனத்தொகை,
ii. ஒவ்வொரு மாகாணத்தினதும் தனிநபர் வருமானம்,
iii. சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வை குறைப்பதற்கு அவசியமான முற்போக்கான தேவைப்பாடு
iv. ஒவ்வொரு மாகாணத்தினதும் தலாவருமானம் மற்றும் மாகாணங்களுக்கிடையே அதிகமான தனிநபர் வருமானம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை குறைப்பதற்கு அவசியமான தேவை

அரசியல் அமைப்பின் உறுப்புரை 154ஆர்(7) இன் கீழ் நிதி ஆணைக்குழுவினால் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யப்பட்ட ஒவ்வொரு விடயத்தினையும் மற்றும் ஒவ்வொரு பரிந்துரை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையினை ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பார்.

கீழே காட்டப்பட்டுள்ள விகிதங்களானது அரசாங்க வரவு செலவுத்திட்டத்திலிருந்து மாகாணங்களுக்காக மீண்டெழும் மற்றும் மூலதனத் தேவைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதாகும்.

அட்டவணை 1 இன் பிரகாரம் மாகாண சபையானது மூலதன நிதியின் தேசிய ஒதுக்கீட்டிலிருந்து ஒரு சிறிய அளவிலான விகிதத்தினை மாகாணங்கள் தொடர்ச்சியாகப் பெறுகின்றன. தற்போதைய முறைமையானது குறிப்பிட்ட மாகாணத்திற்கான, மொத்த வருடாந்த நிதி ஒதுக்கீட்டினை மதிப்பீடு செய்வதற்கு பொருத்தமானதாக அரச கணக்கீடு காணப்படுவதில்லை.

**அட்டவணை 1: வருடாந்த தேசிய வரவு செலவுத்திட்டத்தில் இருந்து வருடாந்தம் மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளின் சதவீதம்**

| வகை | வருடம் | |
|---|---|---|
| | **2016** | **2017** |
| மூலதனம் | 1.6% | 0.95% |
| நடைமுறை | 9.06 % | 8.25 % |

மேலே தீர்மானம் 2 (i) இல் கூறப்பட்டுள்ள விடயமானது இதுவரை ஒரு கடினமான விடயமாகவே உள்ளத ஏனெனில் அதிகாரப்பரவலாக்கப்பட்ட பல்வேறுபட்ட விடயங்கள்

தொடர்பில் நிரல் அமைச்சுக்கள் சமாந்திரமான பிராந்திய அபிவிருத்திக்கு அவசியமான மாகாணங்களின் உண்மையான தேவைகளை அடையாளங் காணப்படாமல் தொடர்ந்தம் பெருமளவான நிதியை வரவு செலவுத்திட்டம் மூலம் ஒதுக்கிக் கொள்கிறது. இது நிதி ஆணைக்குழுவுடன் மாகாணங்கள் தொடர்பான மதிப்பீட்டினைப் பாதிக்கிறது.

## 3. மாகாணங்களுக்கான அரசின் கொடை

அரசியல் அமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்திற்கு அமைவாக அரசானது நிதி ஆணைக்குழுவின் ஆலோசனையுடன் மாகாணங்களின் நிதித்தேவைகளைப்பூர்த்தி செய்யப் போதுமான நிதி ஒதக்கீட்டினை செய்ய வேண்டும் இது பின்வருவனவற்றினை உள்ளடக்கியது:

a. ஒவ்வொரு மாகாணங்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட தேவைகள் மற்றும் தேசிய வழிகாட்டல் கொள்கை மற்றும் முன்னுரிமைகள் ஆகியவற்றினை அடிப்படையாக கொண்டு நிதிஆணைக்குழு மதிப்பீடு செய்கிறது. வரவு செலவுத்திட்டத்தில் இருந்து மாகாணங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய நிதித் தேவைகளை நிதி ஆணைக்கழு அரசிற்கு அறிவிக்கின்றது.

b. இத்தகைய நிதிப் பகிர்வின் நோக்கமானது மாகாணங்களுக்கு இடையிலான பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதாகும்.

2018 ஆம் ஆண்டில் மாகாணங்களுக்கு இடையில் அத்தகைய நிதி ஒதுக்கீடு மற்றும் பகிர்ந்தளிப்பு செயல் முறை பின்வுரும் கொடைகளால் செயல் படுத்தப்படும்.

**மொத்த திட்டக் கொடை -** இந்நிதியானது மாகாண சபைகளின் மீண்டெழும் செலவுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகும். அதாவது சேவை வழங்கல் பொறிமுறையை கொண்டு நடாத்துவதற்கும் மேம்படுத்துவதற்குமாகும். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள மாகாண சபைகளின் ஆளணிக்கான சம்பளங்களும் வேதனங்களும் இம் மீண்டெழும் செலவில் பெரும்பங்கை கொண்டுள்ளது. உண்மையாக சம்பளங்களும் வேதனங்களும் முகாமைத்துவ திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள பதவி ஆளணிகள் வரையறைக்குள் உண்மையில் காணப்படுகின்ற ஆளணியின் அடிப்படையிலே கணிப்பிடப்படுகின்றது. இக்கொடையில் உள்ளூராட்சி மன்றங்களின் அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவுகளுக்கான மீள்பெறுவனவு மற்றும் சம்பளங்களும் வேதனங்களுக்குமான மாற்றல்களையும் உள்ளடக்கியதாகும். (2013 – 2017 காலப்பகுதியில் ஒதுக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட மொத்தக் கொடைகள் **பின் இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளது.**)

**மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை (மா.கு.அ.கொ) -** இந்நிதியானது முக்கியமாக மாகாண சபைகளின் மூலதன அபிவிருத்தித் திட்டத்திற்காக தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஒதுக்கப்படுகிறது. விசேடமாக மாகாணங்களின் உட்கட்டுமான அபிவிருத்தித்தேவையினை பூர்த்தி செய்வதற்காக பகிர்ந்தளிக்கப்படுகிறது. மூலதனச் செலவின் பெரும்பகுதி மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடையினுள் அடங்குவதோடு இக் கொடையின் கீழ் செய்யப்படும் ஒவ்பொரு முதலீடும் முறையான திட்டமிடல் கட்டமைப்பினைப் பின் பற்ற வேண்டும். இக்கொடையானது மாகாண சபைகளின் அபிவிருத்தித்திட்டங்களுக்கு முதலீடு செய்வதற்காக பல்வேறு பட்ட துறைகளுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. (2013 – 2017 காலப்பகுதியில் ஒதுக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட மொத்தக் கொடைகள் **பின் இணைப்பு 2 இல் காட்டப்பட்டுள்ளது.**)

இக்கொடையின் கிழ் விசேட தேவையுள்ள கிராமமக்களின் சமூக பொருளாதார நிலையினை உயர்ததுவதற்காக விசேட ஒதுக்கீடுகள் மெற்கொள்ளப்படுகிறது
இதற்கு மேலாக இக்கொடையில் நெகிழ்ச்சித்தன்மையுள்ள ஒரு சிறிய ஒதுக்கீடானது ‘‘இடைவெளி நிரப்பலாக’’ ஒதுக்கப்படுகிறது இது மூல திட்டத்தில் உட்படுத்தப்படாத அவசர தேவைகளுக்கு பயன்படுத்தப்படுவதற்காகும்.

**வருமான செயலாற்றுகைக்கான கொடை** - நிதி ஆணைக்குழுவானது மாகாணங்களின் வருமானங்களை ஊக்குவிப்பதற்காக ‘‘வருமான செயலாற்றுகைக்கான கொடை’’ என்னும் புதிய கொடையினை சிபாரிசு செய்கிறது. இது அபிவிருத்தியினை நோக்காக கொண்ட கொடையாக இருப்பதுடன் வருமான சேகரிப்பினை அதிகரிப்பதற்கான ஒரு உத்தியாகவும் காணப்படுகிறது. மாகாணங்கள் இக்கொடையினை மூலதன சம்மந்தமான அபிவிருத்தித்திட்டங்களில் பயன் படுத்துவதற்கான உரிமையினைக்கொண்டுள்ளது

## 4. மாகாணத் தேவைப்பாட்டினை மதிப்பிடுதல்

மாகாணங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகளுக்கான நிதித் தேவைகளின் மதிப்பீட்டை நிதி ஆணைக்குழுவானது அரசிற்குப் பரிந்துரை செய்யுமுன் கவனமாக பரீட்சித்து மதிப்பிடும். மேலும் அரசாங்க அபிவிருத்தி கொள்கைத்திட்டம்,பொது செலவீட்டு முகாமைத்துவம், மாகாணங்களின் நடுத்தரகால அபிவிருத்தித்திட்டம், மாகாணங்களின் முன்னைய பொது நிதியினை செலவிடும் செயலாற்றுகை என்பன கவனத்தில் கொள்ளப்படும்

மாகாணங்களின் மூலதன தேவைப்பாட்டு மதிப்பீட்டில் நிதி ஆணைக்குழுவானது தேசிய கொள்கை சட்ட வேலைத்திட்ட மாகாண நடுத்தரகால திட்டங்களின் கீழ்வரும் விடயங்களில் போதிய கவனம் செலுத்துகிறது

- சேவை செயல்திறன் முன்னேற்றம்
- திட்டமிட்ட முடிவுகளை திறம்பட நிறைவேற்றல்
- வேலைப் பிரதியினை தவிர்த்தல் மற்றும் வளங்களை வீணாக தவிர்ப்பது
- முன்னுரிமைத்தேவைப்பாடு
- மாகாண நிறுவனங்களின் திறன் அபிவிருத்தி
- நோக்கம் மற்றும் தொடர்பு

### 4.1 மூலதனத் தேவை மதிப்பீடு

நிதி ஆணைக்குழுவானது 2018 ஆம் ஆண்டுக்கான மாகாணங்களின் மூலதன தேவைப் மதிப்பீட்டு வழிகாட்டுதலை மூலதன தேவைப்பாட்டினை சரியான முறையில் மதிப்பிடும் நோக்கில் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வழங்கியது. வருடாந்த மூலதனத் தேவைப்பாடுகளைப் பொறுத்த வரையில் பின் வரும் விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டது

- தேசிய அபிவிருத்திக்கொள்கை
- உப தேசிய மட்டத்திலான விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்
- மாகாணங்களிலுள்ள மனித மற்றும் பௌதீக வளங்களின் உச்ச பயன்பாடு

- பிராந்தியங்களுக்கிடையிலான மற்றும் பிராந்தியத்திற்குள்ளான ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்
- திட்ட அமுலாக்கல் தயார்நிலை மற்றும் அவற்றின் சாதகத்தன்மை
- பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்துடனான இயைபாக்கம்

## 4.2 நடைமுறைத் தேவை மதிப்பீடு

நிதி ஆணைக்குழுவினது வழி காட்டுதலுக்கு அமைய மாகாணங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட நடைமுறைத் தேவைப்பாட்டினை மதிப்பீடு செய்யும் போது நிதி ஆணைக்குழு கீழ்வரும் கொள்கைகளில் போதிய கவனம் செலுத்துகிறது

- அனுமதிக்கப்பட்ட ஆளணி
- நடைமுறையில் உள்ள உண்மையான ஆளணி மற்றும் மாகாணங்களிலுள்ள வெற்றிடங்கள்
- மாகாண சபைகளுக்கு நிரல் வரிசை அமைச்சினால் ஒப்புக்கொள்ளப்பட்ட நியமனங்கள்
- தனிநபர் சம்பளங்கள், சம்பள நிலுவை மற்றும் ஊழியர்களின் கடன்கள் பற்றிய மதிப்பீடு
- மூலதனச் சொத்துக்களின் பராமரிப்பு உட்பட மதிப்பிடப்பட்ட ஏனைய நடைமுறைமுறைச் செலவினங்கள்
- தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான படிகள்
- உள்ளூராச்சி மன்றங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான இடமாற்றங்கள்
- தொடர்புடைய அரசாங்க சுற்றறிக்கைகள்

## 4.3 2018 ஆம் ஆண்டுக்காக மாகாணங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளுக்கான கோரிக்கைகள்

அட்டவணை 2: மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளுக்கான மாகாண சபைகளின் கோரிக்கைகள் - 2018

*(ரூபா மில்.)*

| மாகாணம் | மூலதனம் | மீண்டெழும் * | மொத்தம் |
|---|---|---|---|
| மேல் | 67,125 | 52,559 | 58,684 |
| மத்தி | 7,319 | 41,055 | 48,374 |
| தென் | 12,400 | 30,918 | 43,318 |
| வடக்கு | 10,310 | 25,800 | 36,110 |
| வடமேல் | 6,762 | 32,243 | 39,005 |
| வட மத்தி | 13,658 | 21,137 | 34,795 |
| ஊவா | 6,434 | 22,980 | 29,414 |
| சப்ரகமுவ | 5,936 | 27,442 | 33,378 |
| கிழக்கு | 13,644 | 25,305 | 38,949 |
| **மொத்தம்** | **82,588** | **279,439** | **362,027** |

*மூலம்: மாகாண சபைகளின் கோரிக்கைகள் - 2018*

*குறிப்பு: * அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான மாற்றல்கள் கழிக்கப்பட்டதன் பின்பு கணிப்பீடு செய்யப்பட்ட தொகையாகும். புதவி வெற்றிடங்கள் உட்பட*

மாகாணங்களுக்கான மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களின் தேவைப்பாடுகள் முறையே ரூபா82,588 மில்லியன் ரூபா279,439 மில்லியன் ஆகும். எனவே 2018 ஆம் ஆண்டிற்கான மொத்தக் கோரிக்கைகள் ரூபா 362,027 மில்லியன் ஆகும்.

## 4.4 மாகாணங்களுக்கு மூலதன நிதியினைப் பகிர்ந்தளித்தல்.

மாகாணங்களின் மூலதன தேவைகளினை மதிப்பிடப்பட்டதன் அடிப்படையில் நிதி ஆணைக்குழுவானது திறைசேரியி அதிகாரிகளுடன் பல தொடர் கலந்துரையாடல்களை நடாத்தியதன் பின்பு மாகாண சபைகளுக்கு மொத்தமாக ஒதுக்கப்பட வேண்டிய தொகை தொடர்பாக ஒரு பொதுவான இணக்கப்பாட்டிற்கு வரும். மாகாண சபைகளுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படக்கூடிய “ **ஒதுக்கிடப்படக் கூடிய தொகை**” அக்கீகரிக்கப்பட்ட பிரமாணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

மாகாணங்களுக்கான மூலதன நிதியினை (வருவாய் செயலாற்றுகைக்கான கொடையினை தவிர) பகிர்ந்தளிப்பதற்காக பல்மாறி புள்ளிவிபரவியல் தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட “காரணி ஆய்வு” (Factor Analysis) என்ற முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சூத்திரத்தை தயாரிப்பதற்குரிய தொழில்நுட்ப உதவிகளை நிதி ஆணைக்குழுவின் வேண்டுகோளிற்கு இணங்க தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் வழங்கியுள்ளதுடன்.

நிதி ஆணைக்குழு பின்வரும் பிரமாணங்களைக் கவனத்திற் கொள்கிறது.

- சனத்தொகை
- மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி
- தலைக்குரிய வறுமை விகிதம்
- சராசரி மாதாந்த தனிநபர் வருமானம்
- ஒரு மருத்துவ அதிகாரிக்கான ஆட்கள்
- விஞ்ஞான துறையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை.

மேற்கூறப்பட்ட சூத்திரத்தின் அடிப்படையில் 2018ஆம் ஆண்டில் மாகாணங்ளுக்கிடையில் மூலதனக் கொடைகளான மாகாணக் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை மற்றும் பிரமாண அடிப்படையிலான கொடைகளை பகிர்ந்தளிப்பதற்கு பின்வரும் மாகாண அடிப்படையிலான விகிதாசாரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### அட்டவணை 3: மாகாணங்களுக்கிடையில் மூலதன நிதி (மா.கு.அ.கொ மற்றும் பி.அ.கொ) பகிர்ந்தளிக்கப்பட்ட சதவீதம் - 2018

| மாகாணம் | குறியீடு * | ஒதுக்கீடு % |
|---|---|---|
| மேல் | 0.58631 | **6.36** |
| மத்தி | 0.89621 | **9.72** |
| தென் | 0.89543 | **9.71** |
| வடக்கு | 1.27113 | **13.78** |
| வடமேல் | 0.94187 | **10.21** |
| வட மத்தி | 1.10997 | **12.04** |
| ஊவா | 1.29017 | **13.99** |
| சப்ரகமுவ | 1.04710 | **11.35** |
| கிழக்கு | 1.18388 | **12.84** |

*மூலம்: நிதி ஆணைக்குழு*

*குறிப்பு: * ஒவ்வொரு மாகாணத்திற்கும் பெறப்பட்ட சூத்திரம்*

நிதி ஒதுக்கீட்டு சூத்திரத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாறிகள் **பின் இணைப்பு 4 இல் தரப்பட்டுள்ளது**

2018ஆம் ஆண்டிற்கு மதிப்பிடப்பட்டுள்ள மாகாண மூலதன தேவைகள் வெவ்வேறாக கீழே **அட்டவணை 4இல்** தரப்பட்டுள்ளன.

### அட்டவணை 4: மதிப்பிடப்பட்ட மாகாண மூலதன தேவைகள் - 2018

*(ரூபா மில்.)*

| மாகாணம் | மதிப்பிடப்பட்ட தேவைகள் – 2018 | | |
|---|---|---|---|
| | மா.கு.அ.கொ | பி.அ.கொ | வ.செ.கொ |
| மேல் | 3,116.40 | 508.8 | 1,036.00 |
| மத்தி | 4,762.80 | 777.6 | 250 |
| தென் | 4,757.90 | 776.8 | 31 |
| வடக்கு | 6,752.20 | 1,102.40 | 584 |
| வடமேல் | 5,002.90 | 816.8 | 350 |
| வட மத்தி | 5,899.60 | 963.2 | 203 |
| ஊவா | 6,855.10 | 1,119.20 | 237 |
| சப்ரகமுவ | 5,561.50 | 908 | 50 |
| கிழக்கு | 6,291.60 | 1,027.20 | 259 |
| **மொத்தம்** | **49,000.00** | **8,000.00** | **3,000.00** |

*மூலம்: நிதி ஆணைக்குழு*

மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை(PSDG) மற்றும் பிரமாண அடிப்படையிலான கொடைகள் (CBG) ஆகியவற்றிற்கு மேலதிகமாக மாகாணங்களின வருமான சேகரிப்பினை ஊக்குவிக்கும் முகமாக இதனை விட வருமான செயலாற்றுகை அடிப்படையிலான கொடை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இப்புதிய கொடை 2018 ஆம் ஆண்டு தேசிய பாதீட்டில் சேர்க்கப்படும்.

## 4.5 மாகாணங்களுக்கு மீண்டெழும் நிதியினைப் பகிர்ந்தளித்தல்.

நிதி ஆணைக்குழுவினால் மதிப்பிடப்பட்ட மாகாண மீண்டெழும் செலவுகள் கீழே அட்டவணை 5இல் காட்டப்பட்டுள்ளன. மொத்தக் கொடையை மதிப்பீடு செய்யும் போது மாகாணங்களின் மதிப்பிடப்பட்ட வருமானங்களானது மாகாணங்களின் மீண்டெழும் செலவுகளில் இருந்து கழிக்கப்படும்

அட்டவணை 5: மாகாணங்களுக்கான மதிப்பிடப்பட்ட மொத்தக் கொடை 2018

*(ரூபா.'000)*

| மாகாணம் | மொத்த மீண்டெழும் செலவு ** | வருமான இலக்குகள், முத்திரை தீர்வை, நீதிமன்றத் தண்டப்பணம் நீங்கலாக. | மாகாணங்களுக்கான அரச வருமாணங்களில் இருந்தான மதிப்பிடப்பட்ட மாற்றல்கள் * | மதிப்பிடப்பட்ட மொத்தக் கொடை |
|---|---|---|---|---|
| மேல் | 49,851,166 | 7,300,000 | 26,400,000 | 16,151,136 |
| மத்தி | 33,904,464 | 1,725,000 | 4,950,000 | 28,229,464 |
| தென் | 31,286,427 | 1,910,000 | 4,950,000 | 24,426,427 |
| வடக்கு | 24,309,945 | 750,000 | 2,750,000 | 20,809,945 |
| வடமேல் | 32,456,839 | 1,940,000 | 4,950,000 | 25,566,839 |
| வட மத்தி | 20,452,411 | 1,100,000 | 2,750,000 | 176,602,411 |
| ஊவா | 21,076,215 | 1,090,000 | 2,750,000 | 17,236,215 |
| சப்ரகமுவ | 27,108,062 | 1,430,000 | 2,750,000 | 22,928,062 |
| கிழக்கு | 25,419,660 | 920,000 | 2,750,000 | 21,749,660 |
| **மொத்தம்** | **266,865,159** | **18,165,000** | **55,000,000** | **193,700,159** |

*மூலம்: நிதி ஆணைக்குழு*

*குறிப்பு: * நிதிக்கொள்கை வழி காட்டி இல.01/2010*

***முத்திரை தீர்வை, நீதிமன்றத் தண்டப்பணம் நீங்கலாக. உள்ளூராச்சி இடமாற்றங்கள்,பதவி வெற்றிடங்கள் , சம்பள நிலுவை, மற்றும் நிரல் வரி அமைச்சுகள்*

அட்டவணை 6: மதிப்பிடப்பட்ட உள்ளூராச்சி அரச மாற்றல்கள் - 2018

*(ரூபா.'000)*

| மாகாணம் | உள்ளூராச்சி அரச மாற்றல்கள் |
|---|---|
| மேல் | 8,417,426 |
| மத்தி | 2,393,076 |
| தென் | 2,186,851 |
| வடக்கு | 1,724,498 |
| வடமேல் | 1,821,403 |
| வட மத்தி | 772,098 |
| ஊவா | 1,144,118 |
| சப்ரகமுவ | 1,229,475 |
| கிழக்கு | 1,528,393 |
| **மொத்தம்** | **21,217,338** |

*மூலம்: 2018 பாதீட்டு மதிப்பீடு, நிதி ஆணைக்குழு*

## 5. மாகாண வருமானம்

மாகாண சபைகளின் வருமானமானது இரண்டு மூலங்களில் இருந்து உருவாகின்றது.

i. அரச வருமானத்தின் மூலமான மாற்றல்கள்
ii. அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்களில் இருந்து சேகரிக்கப்படும் வருமானம்.

### 5.1 அரசாங்க வருமானத்தின் மூலமான மாற்றல்கள்

பொதுத் திறைசேரியின் 2010 டிசம்பர் 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச இறைக் கொள்கை 01/2010 இலக்க சுற்று நிருபத்தின் படி தேசிய வருமான அதிகாரிகளான உள்நாட்டு இறைவரி ஆணையாளர், சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், மோட்டார் வாகனத்திணைக்களப் பதிவாளர் நாயகம் ஆகியோரினால் சேகரிக்கப்படும் வருமானமானது பின்வரும் அடிப்படையில் மாற்றல் செய்யப்படல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

a) 33⅓ % தேசத்தை கட்டியெழுப்பும் வரி
b) 100 % முத்திரைத் தீர்வை
c) 70 % (முன்னர் 60%) மோட்டார் பதிவுக் கட்டணம்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (தே.க.வ) மற்றும் முத்திரைத் தீர்வையானது மாகாண சபைகளுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படும் விகிதாசாரமானது கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. (அட்டவணை 7, 8 என்பன)

### அட்டவணை 7: தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் முத்திரைத் தீர்வையானது மாகாண சபைகளுக்கிடையில் பகிரப்படும் வீதம்

| **மாகாணம்** | **சதவீதம் (%)** |
|---|---|
| மேல் | 48 |
| மத்தி | 9 |
| தென் | 9 |
| வடமேல் | 9 |
| சப்ரகமுவ | 5 |
| வட மத்தி | 5 |
| ஊவா | 5 |
| கிழக்கு | 5 |
| வடக்கு | 5 |
| **மொத்தம்** | **100** |

*குறிப்பு: இவ்விகிதாசாரமானது திறைசேரியினால் நிதி ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து காலத்திற்கு காலம் மாற்றப்படும்.*

### அட்டவணை 8: அரசாங்க வருமான மாற்றல்கள்

| **மாகாணம்** | 2016 | | | 2017 | | |
|---|---|---|---|---|---|---|
| | **இலக்கு** | **மாற்றல்கள்** | **%** | **இலக்கு** | **மாற்றல்கள் (2016 ஜூன் வரை)** | **%** |
| மேல் | 17,568 | 18,248 | 104% | 22,080 | 10,089 | 46% |
| மத்தி | 3,294 | 3,439 | 104% | 4,140 | 1,631 | 39% |
| தென் | 3,294 | 3,388 | 103% | 4,140 | 1,497 | 36% |
| வடக்கு | 1,830 | 1,873 | 102% | 2,300 | 958 | 42% |
| வடமேல் | 3,294 | 3,465 | 105% | 4,140 | 1,697 | 41% |
| வட மத்தி | 1,830 | 2,064 | 113% | 1,830 | 800 | 35% |
| ஊவா | 1,830 | 1,915 | 105% | 2,300 | 948 | 41% |
| சப்ரகமுவ | 1,830 | 1,952 | 107% | 2,300 | 948 | 42% |
| கிழக்கு | 1,830 | 1,924 | 105% | 2,300 | 948 | 42% |
| **மொத்தம்** | **36,600** | **38,267** | **105** | **46,000** | **19,538** | **42** |

*மூலம்: இறைக் கொள்கைத் திணைக்களம் - பொது திறைசேரியினதும் மாகாணங்களினதும் தரவுகள்*

## 5.2 அதிகாரம் பகிர்வளிக்கப்பட்ட வழிகள் மூலம் சேகரிக்கப்படும் வருமானம்

அரசியல் சாசனத்தின் பதின்மூன்றாவது திருத்தத்தின் ஒன்பதாவது உறுப்புரையில் 36.01 இல் இருந்து 36.20 வரையான பகுதியில் காட்டப்பட்டுள்ள மாகாண சபைகளின் வருமானமானது வரி வருமானம் மற்றும் வரியல்லா வருமானம் மூலம் சேகரிக்கப்படுகின்றது. மாகாண சபைகளின் பிரதான வருமான மூலங்களான மோட்டார் வாகனப் பதிவுக் கட்டணம், கலால் வரி, முத்திரைக் கட்டணம், மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்கள் என்பனவாகும். மாகாண சபைகளினால் சேகரிக்கப்படும் முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றப்படுகின்றன. (2015 ஆம் ஆண்டில் மாகாண சபைகளின் பிரதான வருமான மூலங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் **பின் இணைப்பு 5 இல் காட்டப்பட்டுள்ளது.**)

கீழே அட்டவணை 3 இல் 2017 ஆம் ஆண்டு மே மாதம் வரையில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானமானது காட்டப்பட்டுள்ளது. முத்திரை தீர்வைகளானது அதி உயர்பட்ச வருமான மூலமாக தொடர்ந்தும் காணப்படுவதோடு மோட்டார் வாகன பதிவுக் கட்டணம் அடுத்தபடியாக காணப்படுகின்றது.

அட்டவணை 9: அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் - 2017 (மே வரை)

| மாகாணம் | இலக்கு முத்திரைத் தீர்வை நீதிமன்றத் தண்டப்பணம் உள்ளடங்களாக 2017 | அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்த விற்பனை புரள்வு* | மோட்டார் வாகானப் பதிவுக் கட்டணம் | கலால் வரி | ஏனையவை ** | முத்திரைத் தீர்வை | நீதிமன்றத் தண்டப் பணங்கள் | |
| மேல் | 22,800,000 | 10,950 | 1,500,040 | 269,320 | 564,100 | 5,000,000 | 205,000 | 7,594,410 |
| மத்தி | 3,314,000 | 820 | 345,867 | 146,315 | 126,287 | 695,043 | 26,233 | 1,340,565 |
| தென் | 3,175,000 | - | 400,000 | 34,667 | 128,916 | 536,000 | 75,000 | 1,174,583 |
| வடக்கு | 1,068,000 | - | 125,000 | 18,750 | 277,905 | 1,250 | 22,080 | 444,985 |
| வடமேல் | 3,648,500 | 654 | 505,716 | 59,097 | 179,448 | 739,169 | 111,546 | 1,595,630 |
| வட மத்தி | 1,251,000 | 275 | 220,859 | 42,869 | 138,736 | 65,997 | 67,836 | 536,572 |
| ஊவா | 1,140,000 | 625 | 160,417 | 52,754 | 113,009 | 116,667 | 41,667 | 485,139 |
| சப்ரகமுவ | 1,750,000 | - | 260,417 | 46,458 | 80,625 | 237,500 | 66,667 | 691,667 |
| கிழக்கு | 1,175,000 | - | 170,835 | 31,770 | 88,225 | 157,085 | 41,665 | 489,580 |
| **மொத்தம்** | **39,321,500** | **13,324** | **3,689,150** | **702,001** | **1,697,251** | **7,548,711** | **702,693** | **14,353,130** |

*மூலம்: மாகாண சபைகளின் மாதாந்த வருமான அறிக்கை – 2017*

* *2010 வரை சேகரிக்கபட வேண்டிய மொத்த விற்பனை புரள்வு*

** *ஏனைய வாடகை, வட்டி, பரீட்சைக் கட்டணம், மூலதனச் சொத்துக்களின் விற்பனை வருமானம், பந்தய வரி உள்ளடங்கலாக.*

## 5.3 2018 ஆம் ஆண்டிற்கான வருமாண எதிர்வுகூறல்

மாகாண சபைகளின் வருமான இலக்கானது அரசாங்க வருமானங்களிலான மாற்றல்கள் மற்றும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்களில் இருந்தான வருமான இலக்குகளின்

அடிப்படையில் திட்டமிடப்படுகின்றது. இவ்விரு வருமான மூலங்களிலான வருமான இலக்குகளில் இருந்து மாகாணத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மீண்டெழும் செலவுகளானது கழிக்கப்படும்.

நிதி ஆணைக்குழுவானது வருமான இலக்குகளை திட்டமிடும்போது பொதுத் திறைசேரி மற்றும் மாகாண அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கின்றது.

### 5.3.1 அரசாங்க வருமானங்களில் இருந்தான மாற்றல்கள்

மாகாணங்களுக்கு வருடாந்தம் மாற்றப்பட வேண்டிய தொகையானது பொதுத் திறைசேரியினால் அரச இறைக்கொள்கை சுற்று நிரூபம் இல 01/2010 2010.12.29 ஆம் திகதிய சுற்று நிரூபத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. 2018ஆம் ஆண்டின் போது மாகாணங்களுக்கு பொதுத் திறைசேரியினால் மாற்றப்படவுள்ள தேசிய ரீதியில் சேர்க்கப்பட்ட வருமானமானது ரூபா.55,000 மில்லியனாக எதிர்பார்க்கப்படுகிறது

2018ஆம் ஆண்டில் மாகாணங்களுக்கு அரசினால் மாற்றப்படுமென எதிர்வு கூறப்படும் வருமானமானது பின்வரும் வீதத்தில் அட்டவணை 10 இல் காட்டப்பட்டுள்ளது. இது பொதுத் திறைசேரி மற்றும் நிதி ஆணைக்கழுவினாலும் ஒத்துக்கொள்ளப்பட்டதன் விதமாகும்.

**அட்டவணை 10: மாகாணங்களுக்கான மதிப்பிடப்பட்டுள்ள அரசாங்க வருமானத்தில் இருந்தான மாற்றல்கள் - 2018**

| மாகாணம் | மாற்றல்கள் | முன் எதிர்வு கூறப்பட்ட வருமானத்தில் மாகாணங்களின் பங்கு % |
|---|---|---|
| மேல் | 26,400 | 48 |
| மத்தி | 4,950 | 9 |
| தென் | 4,950 | 9 |
| வடக்கு | 2,750 | 5 |
| வடமேல் | 4,950 | 9 |
| வட மத்தி | 2,750 | 5 |
| ஊவா | 2,750 | 5 |
| சப்ரகமுவ | 2,750 | 5 |
| கிழக்கு | 2,750 | 5 |
| **மொத்தம்** | **55,000** | **100** |

*மூலம்: நிதி ஆணைக்குழு*

### 5.3.2 அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான மூலங்களில் இருந்தான வருமான இலக்குகள்

2018ஆம் ஆண்டிற்கான முன்னெதிர்வு கூறப்பட்ட வருமானமானது முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் உள்ளடங்களாக ரூபா 43,612 மில்லியன்களாகும். முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் நீங்கலாக முன் எதிர்வு கூறப்பட்ட வருமானம் ரூபா 18,165 மில்லியன்களாகும். இது அட்டவணை 11இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 11: அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான மூலங்களில் இருந்தான எதிர்வு கூறப்பட்ட வருமானம் - 2018

| மாகாணம் | எதிர் பார்க்கப்படும் வருமானம்: முத்திரை தீர்வை மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் நீங்கலாக | | | எதிர் பார்க்கப்படும் வருமானம்: முத்திரை தீர்வை மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் உள்ளடங்கலாக | | |
|---|---|---|---|---|---|---|
| | மாகாண எதிர்வு கூறல் | நிதி ஆணைக்குழுவின் எதிர்வு கூறல் | நிதி ஆணைக்குழுவின் எதிர்வு கூறலில் மாகாணங் களின் பங்கு % | மாகாண எதிர்வு கூறல் | நிதி ஆணைக்குழுவின் எதிர்வு கூறல் | நிதி ஆணைக்குழுவின் எதிர்வு கூறலில் மாகாணங் களின் பங்கு % |
| மேல் | 23,437 | 23,725 | 54.4 | 7,012 | 7,300 | 40.2 |
| மத்தி | 3,410 | 3,492 | 8.0 | 1,665 | 1,725 | 9.5 |
| தென் | 3,581 | 4,010 | 9.2 | 1,681 | 1,910 | 10.5 |
| வடக்கு | 1,180 | 1,220 | 2.8 | 725 | 750 | 4.1 |
| வடமேல் | 4,290 | 4,340 | 10.0 | 1,900 | 1,940 | 10.7 |
| வட மத்தி | 1,358 | 1,490 | 3.4 | 1,013 | 1,100 | 6.1 |
| ஊவா | 1,231 | 1,570 | 3.6 | 636 | 1,090 | 6.0 |
| சப்ரகமுவ | 1,892 | 2,245 | 5.1 | 1,142 | 1,430 | 7.9 |
| கிழக்கு | 1,270 | 1,520 | 3.5 | 750 | 920 | 5.1 |
| **மொத்தம்** | **41,649** | **43,649** | **100.0** | **18,165** | **18,165** | **100.0** |

*மூலம்: மாகாணங்களின் வரவு செலவுத்திட்ட மற்றும் நிதி ஆணைக்குழு மதிப்பீடு*

2018ஆம் ஆண்டில் முத்திரைத் தீர்வை மற்றும் நீதி மன்ற தண்டப்பணங்களில் இருந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட வேண்டிய எதிர்வு கூறப்பட்ட தொகை ரூபா 25,597 மில்லியன்களாகும். மாகாண சபைகளின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட்ட வருமானங்களின் தொகை **பின் இணைப்பு V இல் தரப்பட்டுள்ளது**

அட்டவணை 12: உள்ளூராட்சி மன்றங்களால் மாற்றப்படவுள்ள முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் -2018

| மாகாணம் | முத்திரை தீர்வை | நீதிமன்ற தண்டப்பணம் | மொத்தம் | மாகாணத்தின் பங்கு % |
|---|---|---|---|---|
| மேல் | 15,500 | 925 | 16,425 | 64.2 |
| மத்தி | 1,670 | 97 | 1,767 | 6.9 |
| தென் | 1,850 | 250 | 2,100 | 8.2 |
| வடக்கு | 480 | 140 | 620 | 2.4 |
| வடமேல் | 2,000 | 400 | 2,400 | 9.4 |
| வட மத்தி | 165 | 225 | 390 | 1.5 |
| ஊவா | 350 | 130 | 480 | 1.9 |
| சப்ரகமுவ | 650 | 165 | 815 | 3.2 |
| கிழக்கு | 450 | 150 | 600 | 2.3 |
| மொத்தம் | **23,115** | **2,482** | **25,597** | **100.0** |

*மூலம்: நிதி ஆணைக்குழு*

## 6. கொள்கைப் பரிந்துரைகள்

- நாட்டில் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு மாகாணங்களுக்கிடையில் ஒரு நியாயமான அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியுள்ளது. எவ்வாறாயிலும் தேசிய வரவு செலவுத்திட்டத்தில் இருந்து ஒரு சொற்ப தொகையை ஒதுக்கீடு செய்வதென்பது பயனற்றதாகும் ஆகவே தேசிய நிரல் அமைச்சுகள் தமது ஒதக்கீடுகளை மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கும் போது நிதி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள விகிதாசாரங்களை கருத்தில் கொள்ளும் படி பரிந்துரைக்கிறது.

- அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயப்பரப்பிற்குக் கீழ் உள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான செலவினங்கள் மீதான நிதிகளை மாகாண சபைகளினூடாக மேற்கொள்ளப்படல் வேண்டும் என பரிந்துரைக்கிறது, இதற்கு மேலதிகமாக அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயப்பரப்பிற்குள் நிரல் அமைச்சுக்களினால் அமுலாக்கப்படுகின்ற அனைத்து கருத்திட்டங்களும் மாகாண சபைகளினூடாக அமுல் படத்தப்படல் வேண்டும் என பரிந்துரைக்கிறது. இதன் மூலம் நிதி இரட்டித்தல் மற்றும் ஒன்றுக்கு மேலான இன்னோரன்ன நடவடிக்கைகள் என்பன குறைக்கப்பட்டு பயனுள்ள நிதிப்பாவனை மற்றும் முதலீடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றையும் ஊக்குவிக்கும்.

- மாகாண மட்டத்தில் கிடைக்கக்கூடிய வளங்கள் மற்றும் தேசிய அமைச்சுக்களால் ஒதுக்கீடு செய்யப்படும் வளங்களையும் பயன்படத்தி தேசிய கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு இயைபாக மாகாண சபைகள் பிராந்திய அபிவிருத்தியில் மிகவும் முக்கிய பங்காற்றுகிறது. மாகாண சபைகளின் மீண்டெழும் செலவுகளானது மாகாண சபைகளினால் அமுல்படுத்தப்படும் அபிவருத்தி நடவடிக்கைகளின் மீதான மனித வளங்களின் மீண்டெழும் செலவுகளுக்கு மேலதிகமாக தேசிய நிரல் அமைச்சுக்களினது செலவுகளும் உள்ளடங்கும். ஆகவே மாகாண சபைகளின் மனிதவள அபிவிருத்திக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும் என பரிந்துரைக்கிறது. இதன் மூலம் அபிவிருத்தித் திட்டங்களை திட்டமிடல், அமுல் படுத்தல், மீளாய்வு செய்தல், கண்காணிப்பு மற்றும் சிறப்பான முகாமை என்பன தொடர்பான தேவைகளை அடையாளம் காண்பதை மேம்படுத்த முடியும்.

- தற்போது தேசிய மட்டத்தில் காலாண்டுக்கு ரூபா 3 மில்லியன்களை விட அதிகமான வருமானத்தைக் கொண்ட நிறுவனங்கள் நாட்டை கட்டியெழுப்பும் வரி (NBT) செலுத்துதல் வேண்டும். அதே வேளை ரூபா 3 மில்லியன்களுக்கு குறைவான காலாண்டு விகிதத்தினைக் கொண்ட வியாபாரங்கள் நாட்டை கட்டியெழுப்பும் வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. ஆகவே ரூபா 3 மில்லியன்களுக்கு குறைவான வருமானத்தை உழைக்கும் வியாபாரங்களில் இருந்து மாகாணசபை வரி அறவிடுவதற்கு அனுமதி அளிக்கப்படல் வேண்டும் என பரிந்துரைக்கிறது. இதற்கு மேலதிகமாக தற்போது வரி அறவிடப்படாத வரி மூலங்களான தனியார் பாடசாலைகள் தனியார் வகுப்புக்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உயர் கல்விக் நிறுவனங்கள் சுகாதார சேவை வழங்குவோர் மற்றும் தொழில் ரீதியான சேவை வழங்குபவர்களிடம் இருந்து வரி அறவீடு செய்வதனூடாக மாகாண சபைகளின் வருமானத்தை மேம்படுத்தவதற்கு பரிந்துரைக்கிறேன்.

- தேசிய மற்றும் மாகாண அபிவிருத்தித்திட்டங்களின் கீழ் வழங்கப்படும் எந்த ஒரு நேரடிக் கொடைக்கும் பயனாளிகளின் அர்ப்பணிப்பும் அத்தகைய முதலீடுகளின் நிலைபேற்றினை உறுதி செய்வதற்காக பயனாளிகளின் 25%-50% பங்களிப்பினை கட்டாயமாக மேற்கொள்ள வேண்டுமென பரிந்துரைக்கிறேன்.

- தரமான கல்வியை உறுதிப்படுத்துவதற்கு தனியார் பாடசாலைகள், உயர் கல்விக்கான தனியார் நிறுவனங்கள் ஒழுங்கு படுத்தப்படுவதுடன் முறையான கண்காணிப்பும் இருக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

- அரச கல்வியானது மாணவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கு வழிகாட்ட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

- இயற்கை அனர்த்தங்களினால் சேதமடையும் மாகாண சபைகளுக்குள்ளான உட்கட்டமைப்பு வசதிகளை புனரமைப்புச் செய்வதற்கு மாகாண வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுகீட்டினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

- கிராமப்புறங்களிலுள்ள பின்தங்கிய பகுதிகளில் முதலீடு செய்ய விரும்பும் தனியார் முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சிகரமான மாகாண ஊக்கப்பொதிகளை அறிமுகப்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. முன்மொழியப்பட்ட முன்னுரிமை ஊக்கப்பொதி வட்டி மானியங்கள் வரி விடுமுறைகள் குறைக்கப்பட்ட வரி விகிதங்கள் மற்றும் உகந்த சலுகைக் கடன்திட்டங்கள் ஆகியவற்றினைக் கொண்டிருக்க வேண்டும். சாதாரண மக்கள் தமது நாளாந்த வாழ்வினை உயர்த்தவும் சமூக உட்கட்டமைப்பு திட்டங்களில் பொது முதலீட்டினைச் செய்வதற்கும் இது உதவும்.

- கைத்தொழில் நடவடிக்கைகளுடன் கூடிய மாகாண வளர்ச்சி மையங்களை பாரிய கருத்திட்டங்களையும் உட்கட்:டமைப்பு வசதிகளுடன் தொடர்பு படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. தேசிய ரீதியான பாரிய கருத்திட்டங்களை மாகாண வளர்ச்சி மையங்களுடன் இணைப்பதற்கான உடனடித்தேவையை கருத்திற் கொண்டு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு அவசியமான விசேட வரவு செலவுத்திட்ட ஒதுக்கங்களை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. இதன் மூலம் பிராந்திய மட்டத்தில் தனியார் முதலீட்டுக்கு வசதி அளிக்க முடியும்.

உதித்த எச். பலிஹக்கார
நியமிக்கப்பட்ட உறுப்பினர் - தலைவர்

இந்திரஜித் குமாரசுவாமி
பதவி வழி உறுப்பினர் - ஆளுனர் இலங்கை மத்திய வங்கி

ஆர்.எச். சமரதுங்க
பதவி வழி உறுப்பினர் - திறைசேரியின் செயலாளர்

வீ. கனக சபாபதி
நியமிக்கப்பட்ட உறுப்பினர்

எச்.எம். ஸபருல்லாஹ்
நியமிக்கப்பட்ட உறுப்பினர்

## இணைப்பு 1: ஒதுக்கிடப்பட்டதும் விடுவிக்கப்பட்டதுமான மொத்தக் கொடை 2013 -2017

*(ரூபா மில்.)*

| மாகாணம் | 20133 | | 2014 | | 2015 | | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு | விடுவிப்பு | ஒதுக்கீடு | விடுவிப்பு | ஒதுக்கீடு | விடுவிப்பு | ஒதுக்கீடு | விடுவிப்பு | ஒதுக்கீடு | விடுவிப்பு 2017 ஜீன் வரை |
| மேல் | 8,502 | 9,691 | 11,699 | 11,699 | 18,842 | 18,842 | 21,744 | 21,741 | 14,867 | 7,430.36 |
| மத்தி | 14,864 | 15,687 | 17,917 | 17,917 | 23,542 | 23,542 | 23,375 | 23,374 | 22,489 | 11,510.17 |
| தென் | 12,908 | 13,586 | 15,785 | 15,785 | 21,459 | 21,459 | 20,508 | 20,507 | 19,204 | 9,900.59 |
| வடக்கு | 10,075 | 10,795 | 12,642 | 12,642 | 16,268 | 16,268 | 16,757 | 16,754 | 16,477 | 8,120.67 |
| வடமேல் | 14,118 | 14,846 | 16,413 | 16,413 | 21,705 | 21,634 | 20,829 | 20,821 | 21,587 | 11,034.34 |
| வட மத்தி | 7,346 | 7,765 | 10,594 | 10,594 | 13,616 | 13,616 | 14,174 | 13,722 | 13,526 | 6,772.26 |
| ஊவா | 10,263 | 10,758 | 12,500 | 12,500 | 16,237 | 16,237 | 16,422 | 16,249 | 15,899 | 7,941.34 |
| சப்ரகமுவ | 13,088 | 13,606 | 14,809 | 14,809 | 18,410 | 18,410 | 18,219 | 18,218 | 19,195 | 9,434.07 |
| கிழக்கு | 11,635 | 12,066 | 13,784 | 13,784 | 17,745 | 17,475 | 17,166 | 16,996 | 17,361 | 8,765.15 |
| மொத்தம் | **102,800** | **108,801** | **126,143** | **126,143** | **167,554** | **167,483** | **169,195** | **168,382** | **160,605** | **80,908.95** |

மூலம்: நிதி ஆணைக்குழு, பொதுத் திறைசேரி

## இணைப்பு 2: ஒதுக்கிடப்பட்டதும் விடுவிக்கப்பட்டதுமான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை 2013 -2017

*(ரூபா மில்.)*

| மாகாணம் | 2013 | | 2014 | | 2015 | | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு | விடுவிப்பு | ஒதுக்கீடு | விடுவிப்பு | ஒதுக்கீடு | விடுவிப்பு * | ஒதுக்கீடு | விடுவிப்பு | ஒதுக்கீடு ** | விடுவிப்பு 2017 ஜீன் வரை |
| மேல் | 1,701 | 1,062 | 2,280 | 1,078 | 2,598 | 2,641 | 3,640 | 1,400 | 765 | 200 |
| மத்தி | 3,254 | 889 | 3,497 | 1,264 | 3,879 | 2,575 | 4,751 | 1,353 | 1,169 | 1,200 |
| தென் | 1,634 | 785 | 1,715 | 1,049 | 3,997 | 2,211 | 3,976 | 874 | 1,168 | 1,159 |
| வடக்கு | 3,692.7 | 836 | 5,551 | 1,328 | 5,038 | 2,399 | 8,343 | 1,800 | 1,657 | 1,397 |
| வடமேல் | 1,867 | 765 | 2,120 | 1,933 | 2,500 | 2,151 | 4,334 | 1,505 | 1,228 | 1,200 |
| வட மத்தி | 2,139.5 | 741 | 3,043 | 1,054 | 2,230 | 2,658 | 4,065 | 1,550 | 1,448 | 1,360 |
| ஊவா | 2,596 | 838 | 3,543 | 2,282 | 3,361 | 2,229 | 3,570 | 1,100 | 1,682 | 1,488 |
| சப்ரகமுவ | 2,765 | 795 | 4,245 | 1,684 | 4,360 | 2,966 | 4,061 | 1,042 | 1,365 | 1,050 |
| கிழக்கு | 4,915 | 1,062 | 3,206 | 1,595 | 2,469 | 1,830 | 4,267 | 1,510 | 1,544 | 1,059 |
| மொத்தம் | **24,564** | **7,773** | **29,200** | **13,267** | **30,432** | **21,660** | **41,007** | **12,135** | **12,026** | **10,112** |

*மூலம்: நிதி ஆணைக்குழு, பொதுத் திறைசேரி*
*குறிப்பு: அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளடங்கலாக*

** விடுவிக்கப்பட்ட மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை மட்டும்

## இணைப்பு 3: ஒதுக்கிடப்பட்டதும் விடுவிக்கப்பட்டதுமான பிரமாண அடிப்படையிலான கொடை 2013 -2017

*(ரூபா மில்.)*

| மாகாணம் | 2013 | | 2014 | | 2015 | | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு | விடுவிப்பு | ஒதுக்கீடு | விடுவிப்பு | ஒதுக்கீடு | விடுவிப்பு* | ஒதுக்கீடு | விடுவிப்பு | ஒதுக்கீடு ** | விடுவிப்பு 2017 ஜீன் வரை |
| மேல் | 370 | 370 | 475 | 292.5 | 525 | 2,641 | 460 | 200 | 254 | 100 |
| மத்தி | 321 | 192 | 430 | 129 | 500 | 2,575 | 423 | 117 | 389 | 200 |
| தென் | 295 | 177 | 380 | 255 | 385 | 2,211 | 413 | 369 | 388 | 150 |
| வடக்கு | 195 | 195 | 280 | 280 | 400 | 2,399 | 475 | 437 | 551 | 229 |
| வடமேல் | 270 | 162 | 350 | 290 | 425 | 2,151 | 375 | 360 | 408 | 200 |
| வட மத்தி | 230 | 742 | 350 | 192 | 375 | 2,658 | 400 | 400 | 482 | 200 |
| ஊவா | 240 | 144 | 330 | 179 | 375 | 2,229 | 475 | 415 | 560 | 200 |
| சப்ரகமுவ | 252 | 151 | 335 | 335 | 400 | 2,966 | 514 | 293 | 454 | 200 |
| கிழக்கு | 217 | 130 | 340 | 227 | 400 | 1,830 | 465 | 445 | 514 | 200 |
| **மொத்தம்** | **2,390** | **2,264** | **3,270** | **2,180** | **3,785** | **21,660** | **4,000** | **3,035** | **4,000** | **1,679** |

*மூலம்: நிதி ஆணைக்குழு, பொதுத் திறைசேரி*
*குறிப்பு :* * மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை, பிரமாண அடிப்படையிலான *உள்ளடங்கலாக*
* மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை, பிரமாண அடிப்படையிலான *உள்ளடங்கலாக*

## இணைப்பு 4: நிதி ஒதுக்கீட்டுக்காகத் தெரிவு செய்யப்பட்ட மாறிகள் 2013 -2017

*(ரூபா மில்)*

| மாகாணம் | சனத்தொகை 2015 | மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி 2014 | தலைக்குரிய வறுமை விகிதம் 2012/13 | நடுத்தர தலைக்குரிய மாதாந்த வருமானம் 2012/13 | வைத்தியர் ஒருவருக்கான நபர்கள் - 2013 | மாகாண ரீதியாக பல்கலைக்கழக விஞ்ஞானத்துறைக் குத்தெரிவானவர்கள் % -2015 |
|---|---|---|---|---|---|---|
| மேல் | 5,979 | 4,320 | 2.00 | 10,567 | 797 | 29.6 |
| மத்தி | 2,658 | 1,073 | 6.60 | 7,150 | 954 | 11.6 |
| தென் | 2,556 | 1,112 | 7.70 | 7,624 | 1,272 | 17.9 |
| வடக்கு | 1,094 | 367 | 10.90 | 5,540 | 1,103 | 5.2 |
| வடமேல் | 2,448 | 1,100 | 6.00 | 7,927 | 1,511 | 10.4 |
| வட மத்தி | 1,312 | 523 | 7.30 | 7,824 | 1,533 | 4.6 |
| ஊவா | 1,316 | 511 | 15.40 | 6,110 | 1,470 | 5.4 |
| சப்ரகமுவ | 1,988 | 689 | 8.80 | 7,229 | 1,477 | 9.8 |
| கிழக்கு | 1,615 | 597 | 11.00 | 5,385 | 1,178 | 5.6 |
| **இலங்கை** | **20,966** | **10,292** | **6.70** | **7,881** | **1,081** | **100.0** |

*மூலம்: புள்ளிவிபரத்திணைக்களம் மத்திய வங்கி, சுகாதார அமைச்சு, சுதேச மற்றும் சத்துணவு*

## இணைப்பு 5: மாகாண வருவாய் சேகரிப்பு மூலங்களிலிருந்து 2013 -2017

*(ரூபா. '000)*

| மாகாணம் | இலக்குகள், முத்திரை தீர்வை, நீதிமன்றத் தண்டப்பணம் உள்ளடங்கலாக 2016 | அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்த விற்பனைப் புரள்வு * | மோட்டார் வாகன பதிவுக் கட்டணம் | கலால் வரி | ஏனையவை ** | முத்திரைத தீர்வை | நீதிமன்றத் தண்டப்பணம் | |
| மேல் | 18,000,000 | 29,210 | 3,869,420 | 812,100 | 2,125,240 | 15,214,230 | 905,080 | 22,955,280 |
| மத்தி | 2,750,000 | 5,006 | 851,458 | 430,632 | 395,998 | 1,658,681 | 93,232 | 3,435,007 |
| தென் | 2,839,700 | 1,521 | 703,339 | 196,538 | 444,421 | 1,714,038 | 21,284 | 3,081,141 |
| வடக்கு | 410,300 | - | 305,484 | 42,483 | 198,604 | 519,296 | 176,744 | 1,242,611 |
| வடமேல் | 3,070,000 | 3,415 | 1,234,279 | 154,91 | 359,778 | 1,778,934 | 386,269 | 3,917,586 |
| வட மத்தி | 1,145,000 | 983 | 481,971 | 67,433 | 566,711 | 161,767 | 209,851 | 1,488,716 |
| ஊவா | 855,000 | 1,532 | 386,955 | 118,573 | 431,545 | 316,217 | 126,663 | 1,381,485 |
| சப்ரகமுவ | 1,390,000 | 1,851 | 671,969 | 123,639 | 558,629 | 619,673 | 162,191 | 2,137,952 |
| கிழக்கு | 940,000 | - | 455,070 | 82,085 | 283,081 | 434,197 | 135,063 | 1,389,496 |
| **மொத்தம்** | **31,400,000** | **43,517** | **8,959,945** | **2,028,394** | **5,364,006** | **22,417,034** | **2,216,377** | **41,029,273** |

*மூலம்: மாகாண சபைகளின் மாதாந்த வருமான அறிக்கை – 2017*

* *2010 வரை சேகரிக்கபட வேண்டிய மொத்த விற்பனை புரள்வு*

** *ஏனைய வாடகை, வட்டி, பரீட்சைக் கட்டணம், மூலதனச் சொத்துக்களின் விற்பணை வருமானம், பந்தய வரி உள்ளடங்கலாக.*

'